# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண்.179 /பேரூ/2023
நாள். 08.07.2023

திரு. இரா. மயில்சாமி,
செம்பருத்திநகர்,
மதுரை மாவட்டம் ... மனுதாரர்

செயல் அலுவலர்,
பரவை தேர்வுநிலை பேரூராட்சி,
மதுரை மாவட்டம் .... எதிர்மனுதாரர்

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி செம்பருத்திநகர், அய்யப்பன் தெரு, பிளாட் 5, என்ற முகவரியைச் சேர்ந்த திரு. இரா. மயில்சாமி என்பவரது 27.05.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 01.06.2023 அன்று பெறப்பட்டு, 179/பேரூ/2023 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி செம்பருத்திநகர், அய்யப்பன் தெரு, பிளாட் 5, என்ற முகவரியைச் சேர்ந்த திரு. இரா. மயில்சாமி என்பவர் தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

" மதுரை மாவட்டம், வடக்கு வட்டம், பரவை பேரூராட்சிக்கு உட்பட்ட பரவை சோதனை சாவடி அருகில் (Check Post) கொண்டமணி ஓடையை அரசுக்கு சொந்தமான இடத்தை ஆக்கிரமித்து சில நபர்கள் பலகோடி ரூபாய் மதிப்பிலான சொத்தை ஆக்கிரமிப்பு செய்து வீடுகள் மற்றும் கடைகள் பெரிய அளவில் அமைத்துள்ளார்கள்.(1) சாந்தி உணவகம், (2) NPA லேத் ஒர்க்ஸ், (3) M.S. மட்டன் ஸ்டால் (4) இலக்கியா ஆட்டோ கன்சல்டிங் மற்றும் MMM வெஜிடபிள்ஸ் கடைகள், சில வீடுகள் உள்ளன. இந்த கடைகள் மற்றும் வீடுகளுக்கு சொத்துவரி வசூலிக்கப்படவில்லை, எனவே சட்டத்திற்கு புறம்பாக அரசுக்கு சொந்தமான ஓடைபுறம் போக்கில் அமைந்துள்ள கடைகள் மற்றும் வீடுகளை அகற்றியும் (Remove) மூடி முத்திரையிடுதல் போன்ற அமலாக்க நடவடிக்கை விரைவாக எடுக்க வேண்டிக் கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 22.06.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் பரவை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3) இந்நிலையில் இம்முறைமன்ற 22.06.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோருக்கு நாகர்கோயில் முகாமில் 28.06.2023 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4) 28.06.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் மனுதாரர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"மதுரை மாவட்டம், பரவை பேரூராட்சிக்குட்பட்ட பரவை சோதனை சாவடி அருகில் (Check Post) அரசுக்கு சொந்தமான கொண்டமணி ஓடையை ஆக்கிரமிப்பு செய்து வீடுகள் மற்றும் கடைகள் பெரிய அளவில் அமைத்துள்ளார்கள். இதனால் அரசுக்கு பெருமளவில் நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது.

மேலும் அங்குள்ள உணவகம், மட்டன் ஸ்டால், ஆட்டோ கன்சல்டிங் மற்றும் காய்கறி கடைகளும், சில வீடுகளும் உள்ளன. மேற்கண்ட கடைகள் மற்றும் வீடுகளுக்கு சொத்துவரி மற்றும் தொழில்வரி பேரூராட்சியால் விதிக்கப்படவில்லை. எனவே, சட்டத்திற்கு புறம்பாக அரசுக்கு சொந்தமான ஓடைபுறம்போக்கில் அமைந்துள்ள கடைகள் மற்றும் வீடுகளை அகற்றியும் மூடி முத்திரையிடுதல் போன்ற அமலாக்க நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

5) பரவை தேர்வுநிலை பேரூராட்சியின் செயல் அலுவலர் 28.06.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தமது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

மதுரை மாவட்டம் பரவை பேரூராட்சி சோதனை சாவடி அருகில் ஓடை ஆக்கிரமிப்பு செய்து வீடுகள் மற்றும் கடைகள் அமைந்துள்ளதாக மனுதாரர் குறிப்பிட்டுள்ளார். ஓடை புறம்போக்கு இடம் பொதுப்பணித் துறைக்கு சொந்தமான இடமாகும். எனவே மேற்கண்ட ஓடை புறம்போக்கு ஆக்கிரமிப்பு குறித்து பரவை பேரூராட்சியால் நடவடிக்கை எடுக்க இயலவில்லை என்கின்ற விவரம் இம்முறை மன்றத்திற்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

6) மனுதாரரின் புகார் மனு மற்றும் அவரது வாக்குமூலம் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

இந்நேர்வில் மனுதாரர் மதுரை மாவட்டம், பரவை பேரூராட்சி சோதனைச் சாவடி அருகில் கொண்டமணி ஓடை அரசுக்குச் சொந்தமான இடத்தை ஆக்கிரமித்து சில நபர்கள் பெரிய அளவில் வீடுகள் மற்றும் கடைகள் அமைத்துள்ளனரென்றும் இந்த வீடுகள் மற்றும் கடைகளுக்கு சொத்துவரி மற்றும் தொழில்வரி விதிக்கப்படவில்லையென்றும் குறிப்பிட்டு, மேற்படி ஆக்கிரமிப்புகளை அகற்றவும், மூடிமுத்திரையிடுதல் போன்ற நடவடிக்கைகள எடுக்கவேண்டுமெனவும் கோரியுள்ளார்.

பரவை பேரூராட்சி செயல் அலுவலர் தமது அறிக்கை மற்றும் வாக்குமூலத்தில் பரவை பேரூராட்சி சோதனை சாவடி அருகில் ஓடையை ஆக்கிரமிப்பு செய்து சிலர் வீடுகள் மற்றும் கடைகள் அமைத்துள்ளதாக மனுதாரர் தெரிவித்துள்ளார். மேற்படி ஓடை

புறம்போக்கு இடம் பொதுப்பணித்துறைக்கு சொந்தமான இடமாகும். எனவே மேற்கண்ட ஓடை புறம்போக்கு ஆக்கிரமிப்பு குறித்து பரவை பேரூராட்சியால் நடவடிக்கை எடுக்க இயலவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

புகார்மனுதாரர் தமது மனுவில் குறிப்பிட்டுள்ள இடம் பொதுப்பணித்துறைக்கு சொந்தமானது என இம்முறைமன்றம் கருதுவதால் இந்நேர்வில் உள்ளாட்சி அமைப்புகளால் நடவடிக்கை எடுக்க இயலாது. எனவே மாவட்ட நிர்வாகமும் பொதுப்பணித்துறையும் இந்நேர்வில் தனிகவனம் செலுத்தி மேற்படி ஆக்கிரமிப்புகளை அகற்ற உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதால் புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்றுவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள மதுரை மாவட்ட ஆட்சியர் (மற்றும்) பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர் ஆகியோர்களை அறிவுறுத்தி இம்முறை மன்றம் ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு, ஜூலை 8 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. இரா. மயில்சாமி,
பிளாட் 5, அய்யப்பன் தெரு,
செம்பருத்திநகர், மதுரை மாவட்டம்.

2) செயல் அலுவலர்,
பரவை தேர்வுநிலை பேரூராட்சி,
மதுரை மாவட்டம்

3) மாவட்ட ஆட்சியர், மதுரை மாவட்டம்,மதுரை

4) தலைமைப் பொறியாளர்,
பொதுப்பணித்துறை, மதுரை

5) பேரூராட்சிகளின்இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
நகர் நிர்வாக அலுவலகம்,ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி நகர், சென்னை – 28.

6) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரிடப்பட்ட உரையில்) பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை –600 028.

நகல்,
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

உதவிப் பதிவாளர்.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சென்னை–600 032